உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ச. } பரீதாபி௵ ஐப்பசிமீ { பகுதி எ.

எறும்புகள்.

(176-ம் பக்கத் தொடர்ச்சி.)

படிப்பினைகள்:—"அத்தி முதல் எறும்பு ஈறான உயிர் அத்தனைக்கும்" என்று நம் முதியோர் எறும்பை அதன் சிற்றுருவைக் குறித்து அதைக் கடைசியில் வைத்துக் கூறுவர். ஆயினும், "சிறியோரெல்லாம் சிறியரும் அல்லர்" "உடல் சிறியர் என்றிருக்க வேண்டாம" "சோம்பித் திரியேல்" என்பனவாதிய ஆன்றோர் வாக்கிற்கு இலக்காக நிற்கும் இவ்வெறும்புகள் கற்பிக்கும் நீதிகளும இவை நினைப்பூட்டும் பழமொழிகளும் பலவுள. அவற்றுள் சில கூறுவோம்:—

ஆகாரம் கிடைத்தற்கரிய காலங்களில் தமக்கு உபயோகமாகுமாறு, எறும்புகள், அவை எளிதிற் கிடைக்கக் கூடிய காலங்களிலேயே சேர்த்து வைத்துக் கொள்ளல் போல, மனிதரும் மழைக்காலத்திற்கு வேண்டியவற்றிற்காக மற்ற எட்டு மாதங்களிலும், க்ஷாம காலத்திற்கு வேண்டியவற்றிற்காக சுபிக்ஷகாலத்திலும், முதுமைக்கு வேண்டியவற்றிற்காக இளமையிலும், மறுமைக்கு வேண்டியவற்றிற்காக இம்மையிலும் பிரயாசப்பட்டு அவற்றைத் தேடி வைத்துக் கொள்ளவேண்டும். "சிதல்எறும் பாதிமுக் கறிவின்மூ வறிவுயிர்" என்பார் நன்னூலார். மூவறிவுடைய எறும்புகளுக்கு இருக்கும் முன்யோசனை ஆறறிவுடைய மனிதர்களுக்கிருக்கிறதா பாருங்கள்! இது பற்றி யன்றோ ஆங்கிலேய 'சோமசன்மா'வாகிய ஜான் கே என்பவர் தமது "கட்டுக்கதை" ஒன்றில்,

"எண்ணித் துணியும் எறும்பினைக் கண்டும்
பின்னே வேண்டுவ இன்னே தேடாது
இருக்க யாரால் இயலும்?" என்றனர்?

ஸாலமன் என்ற ஞானியாரின் நீதிவசனமும் இங்கு உய்த்துணரத் தக்கதே: அவர் சோம்பேறியை நோக்கி "ஏ சோம்பேறியே! எறும்பினிடம் நீ சென்று அதன் வழிகளைக் கவனித்தறிந்து நல்வழிப்படுவாயாக. அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடை காலத்திலேயே தனக்கு வேண்டிய ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்புக் காலத்தில் தானியத்தைச் சேகரித்து வைக்கும். சோம்பேறியே! நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது நித்திரையினின்றும் நீங்கி எழுவாய்? 'கொஞ்சநேரம் தூங்குவோம். இன்னும் கொஞ்சம் உறங்குவோம். இன்னும் சற்றே கை முடக்கிக் கொண்டு நித்திரை செய்வோம்' என்பாயோ? உன் தரித்திரம் நீ எதிர்பாராமல் திடீரென்றும், வறுமை, வலிய ஆயுதம் தரித்தும் வந்தேவிடும்" என்கிறார்.

(2) உருவிற் சிறியனவாயினும், எறும்பினம் பல கால் ஊர்ந்து செல்லுமாயின், கடினமான கற்பாறையும் தேயக் காண்கிறோம். இதுபோலவே ஒருவன் எவ்வளவு மந்தனாயினும் இடையறுது முயற்சித்து வருவானேயானால் முடிவில் காரியசித்தி பெறுவான் என்பதற் கையமில்லை. "எறும்பூரக் கல்லுந் தேயும்" என்ற பழமொழியை உபயோகிக்கும் கருத்து இதுவே என்க. இது காறும் கூறிய இவ்வரிய குணவிசேஷம் இரண்டும் இருப்பதால் அன்றோ யாவரும் நிதான புத்தி,சுறுசுறுப்பு முதலியவற்றுடன் தம் கருமம் கடைப்பிடிக்க வேண்டுமெனச் சொல்ல வந்த பெருவாயில் முள்ளியார் எறும்பையே முதலில் வைத்துக்கூறி உதாரணங்காட்டி,

"நந்தெறும்பு தூக்கணம் புள்காகம் என்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத்—தங்கருமம்
அப்பெற்றி யானும் முயல்வாருக் காசாரம்
எப்பெற்றி யானும் படும்"—என்றனர்?

(3) நம்மவரிற் பெரும்பான்மையோர் சேட்டு என்பது இன்னதென்றே அறியாமலிருக்கின்றனர். பணக்காரர்தாம் செல்வச் செருக்கால் அவ்வாறிருக்கின்றனர் என்றால், இவர்களைப் பார்த்து

எத்துணை ஏழைகள் "அற்பம் அற்பம் என்று" என்ற உண்மையறியாமல் நாள்தோறும் இடர்ப்படுகின்றனர். செல்வர்க்குச் சிறிது பொருள் அழியினும் துன்பமில்லை. அதைக் கொண்டு எளியோர் பலர் பிழைக்கலாமே? இன்னோர்,

"வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயர்உறா—ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்பிங் கொருகோடி உயயுமால்
ஆரும் கிளையோ டயின்று."

என்ற குமர குருபரரின் உபதேச மொழியைக் கேட்டுணர்ந்து சிறு முயற்சி செய்து உறுபயன் பெறுவாராக.

(தான் பெறும் கவளத்தில் ஒரு சிறிது வாயிலிருந்து தப்பி விழுந்து விட்டால், அசைகின்ற இயல்பினையுடைய யானைகள், அதன் நிமித்தம் துன்பமுறா. ஆனால், அக்கவளத்தில் தவறிவிழுந்த அச்சிறிதைக் கொண்டே நகர்ந்து செல்லும் கோடிக்கணக்கான எறும்புகள் மிகுதியான தம் சுற்றத்தோடு உண்டு பிழைக்கும் என்பதே இப்பாட்டின் பொருள்.)

(4) மனிதன் இறந்த தன் போன்ற மனிதனை எளிதில் தூக்கிச் செல்ல முடியுமா? பாருங்கள்! எறும்பு தன்னினும் 15 மடங்கு வலிமிகுத்த பிராணியை இழுத்துச் செல்வதைப் பார்க்குங்கால் எவர்க்குத்தான் "ஈயைப் போல் சுத்தமும் எறும்பைப்போல் பலமும்" என்ற பழமொழி ஞாபகத்திற்கு வராமற் போகும்?

(5) * இவறன்மை கண்டும், † கைத்துடையான் காற் கீழ் ஒதுங்கும் பித்துடையாரைக் காண நேரின்,

ஆகா தெனினும் அகத்துநெய் உண்டாயின்
போகா தெறும்பு புறம்சுற்றும் யாதும்
கொடாஅ ரெனினும் உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்.

என்ற நாலடிச் செய்யுள் ஞாபகத்தில் வராமற் போகாது. ("உள்ளே புகுந்து நெய் குடிக்கக் கூடாமல் இருந்தாலும் அந்நெய் இருக்கும் கலசத்தை எறும்புகள் சுற்றிக்கொண்டு நிற்றல் போல், மறந்தாகிலும் அரைக்காசு கொடாதாராயினும் செல்வவான்களை உலகத்தார் சுற்றிக்கொண்டிருப்பர்" என்பதே இவ்வெண்பாவின் கருத்து).

---

* இவறன்மை-உலோபகுணம்; † கைத்துடையான்-பணக்காரன்.

(6) எதிர் கால விஷயங்கள் தெளிவுபற்றி இறந்தகாலமாகக் கூறப்படும் போதெல்லாம் "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினுல் மழை பெய்தது" என்று சொல்லி நம் விஷயத்தை விளக்குகிறோம். காலவழுவமைதிக்கு இதனையே உதாரணமாக இலக்கணக்காரர் கூறியிருத்தலும் காண்க.

(7) இருதலைக் கொள்ளி எறும்புபோ லாயினேன்:—விலகித் தப்ப முடியாத விபத்துக்களின் மத்தியில் அகப்பட்டு வருந்துவோர் தம் பரிதாப நிலைமையைக் குறித்துச் சொல்லுங்கால் உரைக்கும் சொல் இதுவே.

(8) மனதைக் கவரக் கூடிய நல் விஷயங்களும் அனுபவிக்கக் கூடிய பொருள்களும் ஒருவரிடம் இருக்குமாயின், பிறர் பிரயாசைப் படாமல் தாமாகவே அவற்றைக் கிரகித்துச் செல்லு மாறு பலர் அவரிடம் வருவர் என்பதை "கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு எங்கிருந்தும் வரும்" என்ற பழமொழியால் அறியலாம்.

(9) "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் * உற்றுழித் தீரும்" உறவினரைக் காணின்,

"நண்பர்உற வினர்கள் நம்மை நாடி உற வாடல்
கறுநெய் உறு குடதெறும்பு நண்ணல்என எண்ணாய்"

என்பதை நினைப்பூட்டும்.

(10) பல கற்றோம் யாம் என்று தற்புகழும் பேதை மாக்கள்

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையால்எண் சாண்."

என்ற எவ்வமில் புகழ் சால் ஒளவை மூதாட்டியின் வாக்கை ஓர்ந்திருத்தலாகும்.

இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும்
சிந்திப் பதற்காம் சிலகுறிப் புடையதே.
சற்குணம் உடையோர் சற்றும் பயன் இலா
அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்.

பத்திராதிபர்.

---

* உற்றுழித்தீரும்-ஆபத்து வந்த விடத்தில் நம்மை விட்டு நீங்கிவிடும்.

முத்ரா ராக்ஷஸம்.

(144-ம் பக்கத் தொடர்ச்சி.)

ராக்ஷஸன்:—ப்ரியம்வதக! நம்மைப்பார்ப்பதற்காக ஆகாரவாசலில் காத்திருப்பது யார்? என்று அறிந்துவா!

ஸேவகன்:—"மந்திரியார் உத்தரவுப்படி!"

(வெளியே சென்று பாம்பாட்டியைப்பார்த்து)

யார், ஐயா! நீர்?

பாம்பாட்டி:—ஐயா! நான் ஒருபாம்பாட்டி!. என்பெயர் ஜீர்ணவிஷன். எனக்குப் பாம்பாட்டி ஜீவனம். மந்திரியாருக்கு பாம்பு விளையாட்டு காட்டலாமென்றுவந்தேன்!

ஸேவகன்:—"சரி! சற்றுப்பொறு. நான் மந்திரியாரிடம் தெரிவித்துவருகின்றேன். (ராக்ஷஸனருகிற்சென்று) மந்திரியாரே! யாரோ ஒருபாம்பாட்டியாம். தேவரீருக்குப் ப்பாம்பு விளையாட்டுக் காட்டலாமென்று வந்தானும்!"

ராக்ஷஸன்:—(இடக்கண் துடிப்பதைக் கவனித்து தனக்குள்) "ஏது இன்றைக்குத் தொடங்கும் பொழுதே ஸர்ப்பதர்சனம்! (ப்ரகாசம்) ப்ரியம்வதக! பாம்பு விளையாட்டில் நமக்கு அவ்வளவு குதூகலமில்லை. ஆகையால் அவனுக்கு ஏதாவது வெகுமதி கொடுத்து அனுப்பிவிடு."

ஸேவகன்:—"அப்படியே! (வெளியே சென்று) ஐயா! உம்முடைய பாம்பைப் பார்த்ததாகவே நினைத்துக்கொண்டு, இந்த வெகுமதி உமக்கு மந்திரியார் உத்தரவு செய்திருக்காங்க. உம்முடைய பாம்பைப் பார்க்க அவுகளுக்குத் தேட்டமில்லையாம்."

பாம்பாட்டி:—"ஐயா! நான் பாம்பை வைத்து மாத்திரம் பிழைக்கவந்தவ னல்லன்! கொஞ்சம் ப்ராக்ருதத்திலும் கவிகட்டுவேன் இன்னுட்டு மந்திரியாரிடம் சொல்லுங்க! அதுக்கும் மந்திரியார் என்னைப்பார்க்கத் தேட்டமில்லே இண்டா, இந்தக் கடிதத்தையாவது வாசிச்சுக்கிடச் சொல்லுங்கோ!"

ஸேவகன்:—(கடிதத்தைப் பெற்று ராக்ஷஸனண்டை சென்று) ஐயா! அவன் சொல்லுதான்—தான் பாம்பைமாத்திரம் வைத்துப்பிழைக்க வந்தவனில்லையாம். ப்ராக்ருதத்தில் கவிகட்டுவா

னும்—அப்படிக்கும்—மந்திரியார் பார்க்கத்தேட்ட மில்லேண் ணுட்டா—இந்தக கடிதத்தையாவது வாசிப்பீங்களாம்—''

ராக்ஷஸன்:—(கடிதத்தை வாங்கி வாசிக்கின்றுன்) "வண்டானது, தன்சாமர்த்தியத்தால் மலரினின்றும் மது முழுமையுமுண்டு, பிற ருக்கு உபகாரமாய் அதைக் கக்குகின்றது—''

(ஆலோசித்துத் தனக்குள்)

"சரிதான்! இவன் நமது சாரணன். புஷ்பபுரியில் நடக் கும் விருத்தாந்தங்களறிந்து வந்திருப்பவன்—இதுதான் இச்செய் யுளின் கருத்து. கார்யத்திலேயே நமது கவனம் சென்றிருப்ப தாலும், சாரணர்கள் அநேகரிருப்பதாலும், இவ்வாறு மறக்கும் படி நேர்ந்தது, இப்பொழுதுதான் ஞாபகம் வந்தது!—இப்பொ ழுது பாம்பாட்டி வேஷம் பூண்டிருப்பவன் விராதகுப்த னுகத் தானிருக்கவேண்டு மென்பது நிச்சயம்.

(ப்ரகாசம்)

ப்ரியம் வதக! "இவன் உள்ளே வரட்டும். இவன் ஓர் நல்ல கவிபோலத் தோன்றுகின்றுன். இவனுடைய இனிய வாக்குக் களைக்கொஞ்சம் கேட்போம்.''

ஸேவகன்:—"அப்படியே! (பாம்பாட்டி யிடம்சென்று) வாருங்க, ஐயா!

பாம்பாட்டி:—(ஸமீபத்தில் சென்று *செந்தமிழில்) இதோ இருக்கின்றுரே மந்திரி ராக்ஷஸர். ஆஹா! இம்மஹானுடைய

* குறிப்பு:—ஸம்ஸ்க்ருதத்தில் என்று மூலம்.

(12) முயற்சிக்குப்பயந்து, ராஜ்யலக்ஷ்மியானது, கொடி போன்ற தன் இடது புஜத்தை மெதுவாக மௌர்யன் கழுத்தில் போட்டுக்கொண் டிருப்பாளாயினும், தன்முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டும், தன் வலக்கையானது எவ்வளவோ ப்ரயா ஸையின் மேல் மௌர்யன் தோள்களில் போடப்பட்டதாயினும், அது அடிக்கடி தளர்ந்து கீழே விழப்பெற்றவளாகவும், இப்பவும், மௌர்யனைக் கடாலிங்கனம் செய்து தனது இடதுஸ்தன நுனி யை யவன்மார்பில் புதைக்காமல் சந்தேகித்துத் தயங்கிக்கொண் டுமிருக்கின்றுள்.''

(ப்ரகாசம்) ஐய! ஆர்ய! ஆர்ய;

(இன்னும் வரும்)

R. சேதுநாராயண சர்மா, B. A., B. L.

தாவரங்கள் பரவும் விதம்.

(142-ம் பக்கத் தொடர்ச்சி.)

பட்சிகள்:—அரசு பிரதிஷ்டை செய்யவும், அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம் செய்துவைக்கவும், அநேகர் தாம் மகப்பேறு பெறுமாறு முயன்றும், ஊன்றிய செடிகள் அவிந்து பட்டுப் போவதைக் காண்கின்றோம். ஆனால் ஆங்காங்கே கோவில்களிலும் பழைய மதில்களிலும் நாம் பெரும்பாலும் இதே செடிகளைக் காண்கிறோம் அல்லவா? இவை அங்குத் தோன்றுவதற்குக் காரணம் பக்ஷிகளே என்க. கிளி, காக்கை முதலியன அவ்வப்பழங்களை அதி ஆவலுடன் விழுங்கி மேற்கூறிய இடங்களிலிருந்து எச்சமிடுகின்றன. அப்பட்சிகளால் இவ்வாறு உண்ணப்பட்டும் அவற்றால் ஜீரணிக்கப்படாமல் வெளியேறிய வித்துக்களே அங்கு விழுந்து முளைத்துச்செடியாகி

—"நெட்டிருப்புப்

யாரைக்கு நெக்கு விடாப் பாறை பசு மரத்தின்
வேருக்கு நெக்கு விடும்"

என்பதை நினைப்பூட்டுகின்றன. நிற்க.

ஒரு செடிமேல் மற்றோர் செடியும் ஒரு மரத்திற் பிறிதொரு மரமும் முளைத்து அது உண்ணும் உணவுகளிற் பங்கு பெற்றுச் செழித்துக் கொழுக்கக் காண்கின்றோமன்றோ? வேம்பு, பூவரசு முதலியவற்றில் இருந்து வசித்து வளரும் " தொத்து செடி" (Parasitic Plants) யாகிய புல்லுருவியையும் பனை, வேம்பு முதலியவற்றில் முளைக்கும் ஆல் அரசு முதலியவற்றையும் கவனித்துப் பாருங்கள். இவை முளைத்தற்கும் காரணம் முற்கூறியபடி பக்ஷிகளே. நிற்க.

ஸுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளில் டச்சுக்காரர் ஜாதிக்காய் மரங்களை அடியோடு வெட்டி வீழ்த்திப் பன்முறை சாய்த்தும் அம்மர வர்க்கம் க்ஷீணிக்காமல் விருத்தியடைந்து வருவதற்கு மூல காரணம் புறாக்களே என்று சொல்லப்படுகிறது. இப்புறாக்கள் அம்மரப் பழங்களைத் தின்று நானா இடங்களிலும் எச்சமிட அவை வேர் ஊன்றி முளைத்துப் பல்குகின்றனவாம்! இவ்வாறே ரொமேனியா நாட்டிற் பல இடங்களிலும் பல்வகை விருக்ஷங்கள் செடிகள் முதலியன காணப்படுவதற்கும் பிரான்ஸ் முழுதும் போர்

டோவிலிருந்து திராக்ஷை பயிராகிப் பரவி வருதற்கும் பக்ஷிகளே காரணமாயிருந்து வருகின்றன.

நாற்காற் பிராணிகள்:—இவைகளும் ஒரு விதத்தில் ஸ்தாவர வகைக்குச் சத்துருக்களே யெனினும், தாம் அறிந்தோ அறியாமலோ அவற்றைப் பரவச்செய்வதற்கும் பேருதவி செய்வனவாகும்: ஆடு முதலிய பிராணிகள் மேயும் காலை அவைகளறியாமலே பிசு பிசுப்பான சில விதைகளும் கொக்கிகள் போன்ற வித்துக்களும் அவற்றின் உரோமத்தில் முறையே ஒட்டிக்கொள்ளவும் மாட்டிக் கொள்ளவும் காண்கிறோம். இவ்வித்துக்கள் இப்பிராணிகள் செல்லும் இடங்களில் எல்லாம் சென்று பரவி விடுகின்றன. எத்தனை பழங்கள் தமது வனப்பினாலும் நிறத்தாலும் வாசனையாலும் அணில், குரங்கு முதலிய பிராணிகளின் மனத்தைக் கவர்ந்து அவற்றை இடம் விட்டு இடம் எடுத்துச்செல்லச் செய்துவிடுகின்றன!

காற்று:—வித்துக்களை நாலு இடங்களிலும் பரப்புவதில் காற்று முக்கிய சாதனமாக இருக்கிறது. பஞ்சுபோன்று வாலுடைய இலேசான வித்துக்கள் சில அதி தூரம் பறந்து செல்லக் காண்கிறோம். சாதாரணமாக அற்பக்காற்று அடித்தாற்கூட ஆழ்ந்தபள்ளத்தாக்கில் இருக்கும் அவ்வித்துக்கள் அதி உன்னதமான மலைச்சிகரம் போய்ச்சேர்ந்து விடுகின்றன. அடிக்கும் புயற்காற்றில் கேட்பானேன்? அவை மேக மண்டலங்களுக்கு அப்பாலும் கொண்டு போகப்பட்டு அங்கிருந்து கடல்களையும் கடந்து தூரதேசங்கள் புக்கு ஆங்கு இறங்கி முளைத்துவிடுகின்றன. அவ்விதமான செடிகளில் ஆசிய கண்டத்து மலைமளில் முளைக்கும் ஒருவகைப் பாசியையே உதாரணமாகச் சொல்லலாம். இத்தகைய செடிகள் சிற்சில சமயங்களில் பாழ் வெளிகளில் அடர்த்தியாய் விழுந்து முளைத்துப் பிரயாணத்தாற்களைத்த வழிப்போக்கர்களுக்கு ஆகாரமாயும் உதவிவிடுகின்றன. இவ்வாறு பறந்து சென்று பயிராகும் வித்துக்களுக்கு உதாரணமாக வால் நீண்ட எருக்கு, சருகு போன்ற வெங்கைக்கனி பீநாறிக்கனி ஈண்டங்கனி முதலியவற்றைக் கூறலாம்.

நீர்:—விலங்குகள், பறவைகள், காற்று முதலியவைகளால் கொண்டுபோக முடியாதபடி மிகக் கனமாய் இருக்கும் வித்துக்கள்

தண்ணீரின் வழியாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பிரயாணஞ் செய்கின்றன. இத்தகைய வித்துக்கள் தாம் போர்த்துள்ள கவசங்களின் உதவிகொண்டே நீரில் மிதந்து செல்லுகின்றன. உதாரணமாக: ஆபிரிகா கண்டத்தில் ஸெஷேல்ஸ்(Seychelles) தீவுகளில் முளைத்துப் பயிராகும் தேங்காய்கள் கடல் நீர் வழியாகவே நமது இந்தியாவின் மேற்கடலோரமாயுள்ள மலையாளக் கரைவந்து சேர்ந்து அங்குள்ள நிலம் தம் வளர்ச்சிக்கு ஏற்றதாய் இருப்பதால் அங்கு வேரூன்றி முளைத்துச் செழிக்கின்றன. இதே மாதிரியாக அமெரிகா கண்டத்திலிருந்து கோகோ, பனம் பழம் முதலியன அலைகளால் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஸ்காண்டிநேவியா என்னும் தீபகற்பம்போய்ச்சேருகின்றன. ஆயினும் அவை பயிராவதற்கான சீதோஷ்ணம் அங்கின்மையால் அவை அவ்விடங்களில் முளைப்பதில்லை. சமுத்திரங்களின் இடையில் ஆறெனச்செல்லும் நீரோட்டங்கள் (currents) தாம் ஓடிச்செல்லும் இடந்தோறும் தம்மிடத்து வந்த வித்துக்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கின்றன என்று கார்ல் முல்லர்(Karll-Muller)போன்ற நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இது முற்றிலும் பொருத்தமுடைத்தேயாம். ஏனெனில், தென் அமெரிக்காவில் உள்ள பிரேஜில் எங்கிருக்கிறது? ஆபிரிகாவில் உள்ள காங்கோ எங்கிருக்கிறது? பிரேஜிலிலிருந்து காங்கோவுக்கும், இந்தியாவிலிருந்து பிரெஜீலுக்கும் வித்துக்கள் பிரயாணம் செய்கின்றன வென்று உள்ளபடியே கண்டு பிடித்திருக்கிறார்கள். நிற்க.

விதைகளும் தாவரங்களும் பரவ இன்னும் இரண்டு வகைகள் உண்டு. அவற்றைச் சுருங்கக் கூறி விஷயத்தை முடிப்பாம்.

இமயமலையின் உன்னத சிகரங்களில் முளைக்கும் செடிகள் அதனின்றும் உற்பத்தியாகும் கங்கை போன்ற நதிகளின் வீழ்ச்சியால் அந்நதிகளின் கழிமுகத்தெதிர் நிலம் (Delta) போய்ச்சேர்கின்றன. ஆபிரிக்காவில் உள்ள நீல நதி(Nile) யில் அது தோன்றுமிடமிருந்து சமுத்திர சங்கமமாகும் வரை பிரமாண்டமான அல்லிகள் நிறைந்திருப்பதற்கும் காரணம் இதுவே என்க. செடிகளைப்போலவே மலையில் உள்ள வித்துக்களும் பாறைபாறையாக உருண்டிறங்கும் பனிக்கட்டிகள் மூலமாகப் பூமிவந்து சேருகின்றன. ஜர்மனிதேசத்தின்

வடபாகங்களிற் காணப்படும் பாசிகளும் காளான்களும் ஸ்காண்டிநே விய (Scandinavian Mountains) பர்வதங்களினின்றும் பனிப்பா றைகள் மூலமாக வந்து சேர்ந்திருக்கவேண்டு மென அபிப்பிராயப் படப் பல ஏதுக்கள் காணப்படுகின்றன.

இனி மனிதன் மூலமாகத் தாவரம் பரவுவது சொல்லித்தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமே யன்று. மனிதன் தன் உணவிற்கும் உபயோகத்திற்குமின்னவற்றையும் எப்பாடு பட்டேனும் எங்கிருந் தேனும் பெற்றுக்கொண்டு விடுவானல்லவா? புலிப்பால் வேண்டு மாயினும் பெறுவதற்குப் பின்வாங்காத மனிதனுக்குத் தனக்கு வேண்டிய தாவரங்களைத் தருவித்து விருத்தி செய்யவா முடியாமற் போய்விடும்? அவன் சுருட்டுப் பிடிக்க விரும்பினுனயின் அமெரிகா விலிருந்து புகையிலை வித்து, செடிமுதலியன வரவழைத்துப் பயிர் செய்து விடுகிறான். அயர் லாண்டில், ஏதேஷ்டமாய்ப் பயிராகி அங்குள்ளார்க்குக் கற்பக விருக்ஷமாக விளங்கும் உருளைக் கிழங்கு தென் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டதன்றோ? மத்திய அமெரிக்காவில் பயிராகும் காப்பிச்செடி அரேபியாவிலன்றோ தோன்றியது? வட அமெரிக்காவிற் பயிராகும் கோதுமை நம் ஆசியா கண்டத்துப் பாரஸீகத்தினின்றும் போனதேயாகும். ஓலிவையும் திராக்ஷையும் எல்லாக் கண்டங்களுக்கும் அவ்வக்கண்டத்தாரால் ஆசிய மலைகளினின்றே கொண்டுபோய்ப் பயிராக்கப்பட்டவை. ஆஸ்திரேலியாவில் உள்ள நியுஸவுத் வேல்ஸ் கிச்சிலிக்குப் பேர்போன தென்பர். அக்கிச்சிலிச் செடி சீனுவிலிருந்து கொண்டுபோகப்பட்ட விஷயம் சிலரே அறிவர். இவைகளும் இன்ன பிறவும் மனிதனுல் தான் பெரும் பாலும் தாவரங்கள் பரவுகின்றன என்பதற்குப் போதிய சான்ருகும். நிற்க.

இது காறும் கூறியவற்ருல் தாவரங்களும் தாம் இருக்கும் இடத் திலேயே இருந்து அவிந் தொழியாதிருக்கவும், சந்ததி அபிவி ருத்திசெய்யவும் விரும்புகின்றன வென்றும் அதற்காக இடம்விட்டு இடம் செல்ல வேண்டிய தவசியமென அவைகளுக்கே படுகின்ற தென்றும் பற்பல உபாயங்களால் அவை தமதெண்ணத்தை இயன்ற வரை இனிது நிறை வேற்றுகின்றன வென்றும் யாவரும் அறிந்

திருப்பர். கனிகள் முதலியன வெடித்தலாலும் சிதறுதலாலும் வித்துக்கள் ஒருபோதும் 15 மீட்டர்கள் அதாவது சுமார் 50 அடிக்கு அதிகம் சென்றதில்லை. ஆனால் நீர், காற்று, விலங்கு, புள் ஆதியவற்றால் இவ்வளவு தூரந்தான் அவை பரவும் என்று குறித்துரைக்க எவராலும் இயலாது. ஏனெனில், அது பருவ நிலைமையையும் அப்போதைக் கப்போது நேரும் பாதக சாதகங்களையும் பொறுத்திருக்கிறது. ஆயினும் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் நீரே வித்துக்களையும் செடிகளையும் அதிக தூரம்கொண்டு செல்லுகின்றன என்று மட்டும் துணிந்து கூறலாம்.

தியாகராஜய்யர்,
மதுரைக் காலேஜ்.

ஆன்ம இலக்கணம்.

(167-வது பக்கத் தொடர்ச்சி.)

இவ்வடிமைத்திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினுமவை அவருக்குப் பந்தமாதலில்லை. ஏனையோர் செய்யும் வினை, பந்தமாதற்கு மிவர் செய்யும் வினை பந்தமாகாமைக்கும், ஏது வென்னை யெனின், தான் முதலென நிற்றலும் தான் முதலன்றென இறைவனைச் சார்ந்து நிற்றலுமேயா மென்க. சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதலின் இங்ஙனம் இருவேறு வகைப் படச் செய்யுமிறைவன் செயல் நடுநிலைமைக்கு விரோதமாகாது. பாசக்ஷயம் சிவப்பேறு என்னும் பயனிரண்டனுள் இது பாசக்ஷயமாம்.

இவ்வாறு பாசக்ஷயம் வந்த பொழுது துரியநிலைக் கண்ணதாகிய அருள்நிலை யென்னும் பதிநிலையாகிய சுகப்பிரபை மாத்திரையே விளங்குவதன்றி, துரியா தீத நிலைக் கண்ணதாகிய சிவத்துவ விளக்க மென்னும் பரம சுகமாகிய ஆனந்த விளக்கம் விளங்காமையின் அது விளங்குதற் பொருட்டு உருவத்தைக் காணும்படி கண்ணுக்குக் காட்டியுங் கண்ணோடு ஒருங்கிசைந்து நின்று உருவத்தைக் காணு மான்மாப்போல அறிவிக்க அறியுமியல்புடைய ஆன்மாவிற்கு விடயத்தை யறியும்படி உடனாய் நின்று அறிவித்தும் அறிந்தும் வருமிறைவனுடைய அத்துவித நிலையை மறவாது கடைப்

பிடித்து அன்பு செய்யும். செய்யவே இறைவன் திருவடியாகிய சிவானந்தானு பூதியிற்றலைப்படும். அத்துவிதமாவது இருபொருளை ஒப்புக்கொண்டு அப்பொருள் வேறு பிரிக்கமுடியாமலிருப்பதை உணர்த்தும். இதனை "அத்துவிதமாவது பேதப்பொருளிரண்டுந் தம்முள் அபேத மாதற்குரிய சம்பந்த விசேடம்" என அருளிச்செய்த மாதவச் சிவஞான யோகிகள் திருவாக்கால் இனிது தெளிக.

இவ்வாறு இறைவன் உடனாய் நின்று உபகரித்து நிற்கும் உரிமையை நோக்குந் தோறும் நோக்குந்தோறும் அப்பொருட் கட்செல்லு மிச்சை அடங்காது மீதூறுமாகலின் அவ்வழி அவ்விச்சையே பேரானந்தமாகி விளங்கித் தோன்றும். இந்த அன்பு நிலையைத்தான் "அன்பே சிவமாவ தாரு மறிந்த பின், அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே" எனத்திருமூல நாயனாரும் "இன்பமே என்னுடைய அன்பே" எனவும் "அன்பினில் விளைந்த ஆரமுதே" எனவும் மணிவாசகப் பெருமானும் "இன்பமெனும் அன்புமுண்டு" எனத் தாயுமான சுவாமிகளும் அருளிச் செய்வாராயினர்.

இங்ஙனம் ஆனந்த மனுபவிக்குங்கால் ஆன்மாக்கள் இறைவனேயாய் நிற்றலால் இறைவனுக்குத் தன்னைப் பற்றுதல் என்னுங் குற்றமுண்டாகாதோவெனின், ஆகாது. என்னை? கணணொளியோடு கூடிநின்று ஆதித்தன் தன்னைக் காணுமாறுபோல் ஆன்மாவுடன் ஏகமாய் நின்று இறைவன் தன்னைக் காணுமாதலா லென்க. தனக்கெனச் செயலில்லாத ஆன்மா கண்டதென்று கூறுவ தெற்றுக் கெனின்? கண்டற் பயன் கண்ணுக்குப் போல ஆன்மாவுக்காதலி னென்க.

இங்ஙனம் அன்பினால் மறவாதேத்த இறைவனது சீர் பாதத்தை அணைதலாகிய இது சிவப்பேறும்.

இவ்வாறு பாசவீடுதி, சிவப்பேறு என்னும் இருபயனும் ஒரு சேரப் பெற்றபோது பரமான்மாவெனப் பெயர்பெறும். இந்நிலையே பரமுத்தி உடம்பு நிற்குமளவும் ஜீவன் முத்தியெனப் பெயர் பெறும். இத்தகைய முத்தி நிலையில் நிற்கு மான்மா மல நீக்கத்தாலிறைவனோ டொற்றுமையுடையதாயினுமதுபற்றி சிவசம மென்றல் சாலாது. என்னை? இறைவன் இயல்பாகவே மலத்தினின்று நீங்குதலும் ஆன்மா இறைவனருளால் மலத்தினின்று நீங்குதலுமாகிய வேற்றுமை யுண்மையானும் ஒன்றைச்சார்ந்தபோது அது அதுவதுவாய் நிற்பதன்றிப் பிறி தொன்றனையுஞ் சார்ந்து நிற்குந் தன்மை ஆன்மாவிற் கின்மையால் சூரியனைச்சார்ந்த கண் சூரியனாய் நிற்பதன்றிச் சூரியன்போற் பிறர்க்குப்பொருளை விளக்காத வாறுபோலும் கையுங் காலும் முடமாயுள்ள ஒருவனிடத்தில் அவற்றையுடைய பசாசு ஆவேசமானது

கொண்டு கொடுக்கல் வாங்கலும் நடத்தல் முதலியனவுஞ் செய்யமுடியாதது போலவும். சிவ வியாபகத்தைச் சார்ந்தபோது அது வாய் நின்று ஆனந்த மனுபவிப்பதன்றி அவ்விறைவன் செய்யும் பஞ்சகிருத்தியங்களைத் தான் வியாபித்துச்செய்தல் கூடாமையாலு மென்க.

அங்ஙனமாயின் முத்தன் சிவனோடு சமமாவன் என்னுஞ் சுருதிகளுக்குக் கருத்தென்னை யெனின்? சிவமுமுத்தனும் பஞ்சகிருத்தியத்திற்கு உட்படாமை யொன்றே பற்றி யென்க. இங்ஙனம் பரமான்மா வாய் எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து மெய்யுணர்ந்து நிட்டை கூடினோர்க்கு உடம்பு நிற்கு மளவும் பிராரத்தவினை அவ்வுடம்பைப் பற்றி நிற்றலால் ஒரோ வழி வினைவயத்தால் வாசனை வந்து தாக்கும். தாக்கவே விருப்பு, வெறுப்புக் களுளவாம். உளவாகவே பரமே பார்த்திருப் பார்க்கு நில முதலிய ஏக தேசப் பொருள் காட்சிப்படும். படவே அவற்றைச் சுட்டி அறிவதாகிய விபரீத வுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்து பிறவிக்கு வித்தாம். இவ்வாறு விருப்பு, வெறுப்பால் கன்ம மலமும், நில முதலிய காட்சிப்படுதலால் மாயாமலமும், சுட்டி யறிதலால் ஆணவமலமும் அறி வற்றம் பார்த்துத் தலைப்படுமாதலின் அறிவு, இச்சை, செயல்கள் புறத்துச் செல்லுங்காலும் மும்மலமும் தாக்காதிருத்தற் பொருட்டு சாதனத்தை அனுட்டித்தலாகிய அறிவின் வியாபாரத்தையும் சிவனடியார்களோ டிணங்குதலாகிய இச்சையின் வியாபாரத்தையும் சிவனடியாரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் சிவனெனக்கண்டு வழிபடுதலாகிய செயல் வியாபாரத்தையும் மேற்கொள்ளல் வேண்டும். இவ்வாறு பிராரத்தத்தை வினை முடியுமளவு அநுட்டித்து வினைமுடிவில் உடலுமுலகமுந் தோன்றாது ஒப்பற்ற பேரானந்த பரவெளியாய்நிற்பன்.

இங்ஙனம் பாசக்ஷயம் சிவப்பேறு சீவன் முத்த நிலை ஆகிய மூன்று மான்மாவிற்குச் சிறப்பியல் பிற் சிறப்பெனப்படுஞ் சொரூப இலக்கணமாம். "மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம், ஆனிடத் தைந்து மாடு மரன்பணிக்" காதலால் மானுட ஆக்கைபெற்ற ஒவ்வொருவரும் ஆன்மாவின் சிறப்பிலக்கணமாகிய சிவானந்தப்பேற்றை யடைவதற்கு முயலவேண்டும்.

முடிவுரை.

ஆஸ்திக சமயம் யாவும் கடவுள், ஆன்மா, பாசம் என்னு முப்பொருள் உண்மை ஒப்புக்கொள்ளுமென்பதூஉம், கொள்ளினுமப் பொருள்களினிலக்கணம் உள்ளவாறு கூறுவது சைவசமயமே என்பதூஉம், முப்பொருள்களு

க்கும் சொரூப இலக்கணமெனப்படும் சிறப்பியல்பும், தடத்த இலக்கணமெனப்படும் பொதுவியல்புமென இரண்டியல்புகள் தனித்தனியுண்டென்பதூஉம், இலக்கண நூலார்கூறும் இவ்வியல்புகளுக்கும் இவற்றிற்கும் வேற்றுமையுண்டென்பதூஉம், ஆன்மா சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடைய வியாபகப்பொருளென்பதூஉம், மூவகையாய் மூன்றவத்தையுறு மென்பதூஉம், கேவலம் பொதுவியல்பிற் பொதுவென்பதூஉம், சகலம், சுத்தம், அறுவகைப் படுமென்பதூஉம், அவற்றுள் சகலத்தினிகழும் நான்கும் பொதுவியல்பிற் சிறப்பென்பதூஉம், சுத்தத்தினிகழும் இரண்டில் முன்னைய சாதனம் சிறப்பியல்பிற் பொதுவென்பதூஉம், பின்னைய பயன் சிறப்பியல்பிற் சிறப்பென்பதூஉம், பயனாகிய முத்திபெற்ற காலத்தும் ஆன்மா சிவத்துக்கடிமையேயன்றி சிவசமமன்றென்பதூஉம், முத்தியிற்சிவசமமென்றது பஞ்சகிருத்தியத்திற்குட் படாமைபற்றி யென்பதூஉம், உடம்போடு கூடி சீவன்முத்தி நிலையில் நிற்குங்காறும் நிட்டை சாதித்தலும் சிவனடியாரோடிணங்குதலும் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழிபடுதலும் வேண்டுமென்பதூஉம், இந்நிலையடைவதற்கே ஒவ்வொருவரும் முயலவேண்டுமென்பதூஉம், பிறவுமாம்.

பொ. மு. முத்தையபிள்ளை.
திருவாவடுதுறை ஆதீனசைவப் பிரசாரகர்,
தூத்துக்குடி.

மாலினீ மாதவம்.

(204-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினேழாவது அத்தியாயம்.

பகல்வேஷம்.

The Masque.

உலகஸம்பவங்களை ஒருவாறு ஆராய்ச்சி செய்வோமாகில் அவைகளெல்லாம், நித்யமாயும் என்றும் மாறாதனவுமான சில அற்புத விதிகளுக்குட்பட்டே நடக்கின்றன வென்று தோன்றும். இவ்விதிகளின் ஸூக்ஷ்மங்களை யறிந்துகொண்டு அவைகளை அனுஸரித்து அவைகளைத் தன்னாளுகைக்குட்படுத்தித் தனக்கு உபயோகமாகச் செய்து கொள்வதே மனிதனுடைய புத்தித்திறமை. தற்காலத்தில் அமைக்கப் பட்டுள்ள அற்புத யந்திரங்க

ளெல்லாம், உலக விதிகள் மனிதஸ்வாதீனத்துக்கு உட்படுத்தப்பட்ட அற்புத புத்தித் திறமைகளைக் காட்டும். உலகஸம்பவங்க ளெல்லாம் கார்ய காரண விதிகளுக் குட்பட்டே நடக்கின்றன. ஓர் கார்யமானது (effect) பல காரணங்களால் ஏற்படலாமாயினும், புத்திமான், அப்படிப்பட்ட காரணங்கள் யாவையும் ஆராய்ச்சி செய்து, அவைகளை அக்கால சந்தர்ப்பங்களுடன் ஒத்துப் பார்த்து அவைகளில் பாவ்யம் இன்னவை அபாவ்யம் இன்னவை என்பதைப் பகுத்தறிந்து பிறகு பாவ்யமானவைகளை மாத்திரம் தனது ஆராய்ச்சி (Investigation) யின் பாதையாகக் கைக்கொண்டு செல்வானாயின் அநேகமாய் உண்மையான மூலகாரணத்தைக் கண்டுபிடித்து விடலாம். இப்பொழுது கூறியவை யெல்லாம் சித்தாந்த (Theory)த்துக்கு அழகாயிருக்கலாம். அனுஷ்டானத்தில் உபயோகிப்பது மாத்திரம் கடினம். மண்ணுலக ஸம்பவங்கள் அற்புதமாகவும் அதிகச் சிக்க (Complicated)லாகவும் இருக்கும். ஆகையால், ஒவ்வொன்றையும் அந்தந்த ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறே கவனித்துக் கொள்ள வேண்டும். அதற்குத் துல்யமான பொதுவிதி யொன்றும் சொல்ல முடியாது.

மூன் அத்யாயத்திற் கூறிய விருத்தாந்தங்கள் நடந்து சில நாட்களாயின. ஒருநாள் மாலை சுமார் ஆறுமணி நேரமிருக்கலாம். அப்பொழுது தான் கதிரவன் பகல் முழுதும் ஸஞ்சரித்த அலுப்பினால் தனது உக்ரமெல்லாம் தணிந்து எங்கும் செம்மேனி வாய்ந்தவனாய்ச சற்றுச் சிரம பரிகாரம் செய்வதற்காக மேற்குத் திசையில் அஸ்தமனமானான். அந்நேரத்தில் கள்ளன் கோட்டை வாசலருகில் ஓர் உத்தர தேசத்தான் தாடியும், மீசையும் கழுத்து முதல் கால்வரை துவளும் கம்பளிச் சட்டையும், பெரிய தலைப் பாகையும், சிறு செம்பும், 'உக்காவும்' 'சோட்டாதடியும்' தரித்து ப்ரவேசமானான்.

அங்கு வாசலில் நின்றவனை நோக்கி, "அடேயப்பா! உங்க தலைவர்கள் எங்கே?" என்றுவினவ, அவன், "ஏ! லாடா! உள்ளே கிள்ளே போணியோ தெரியுமா சேதி? முதலாளி ஒருத்தனையும் விடக்கூடாது எண்டிருக்காங்க, என்றான்.

வந்தவன்:—"அப்பா நான் லாடனில்லை. தமிழன் தான்—"

காவல்காரன்:—"ஏ, கோணங்கிப் பலே! இங்கே என்ன வேடங் கிடம் போட்டுக்கினு எதையாவது அடிச்சுக் கிண்டு போகப் பாக்குறையோ? போ, அங்கிட்டு! உள்ளே நுழஞ்சாயோ (தடியை ஓங்கிக் கொண்டு) இப்பபடியே நச்சினுட்டு, செத்தமாட்டே அடிச்சாப்பிலே அடிச்சிடுவேன்—"

வந்தவன்:—யப்பா! நீ செத்தமாட்டை யடிப்பதிலே சாமார்த்திய சாலி தான்—"

காவல்காரன்:—(கோபத்துடன்) "ஏ, பரதேசிப்பலே! என்ன குறும்பா? கேலி கிலீ பண்ணிக்கிட்டுத் திரியுதே! போ இன்னுக்கப் போகுதையா என்ன—"

வந்தவன்:—"அப்பா நான் பிச்சைக்காரன். பகல் வேஷக்காரன். உங்க முதலாளிகளேக் கண்டா என்ன வாவது நாலு கஞ்சிப்பாட்டுக்குக் கொடுப்பாங்க. வருசாவருசம் வந்து வாங்கிக்கிட்டுப் போவது வழக்கம். போன வருசம் கூடவந்தேன். உனக்குத் தெரியாதா? நீ கூட ஒரு தெம்மாங்கு பாடச் சொன்னியே. நான் பாடினேன். நீ மறந்து விட்டாயோ? "என்ன தம்பி! ஞாபக மில்லாதவன் போலப் பாக்குதையே!" என்ன, காவல்காரனுக்கு உச்சிகுளிர்ந்து விட்டது. அவன் வந்தவனே நோக்கி "ஏ அண்ணே! இப்போ ஒரு பாட்டுப் பாடு "என்றான் உடனே வந்தவன்

தன் 'கிஞ்சரியை அடித்துக் கொண்டு,
"அடே, மதுரேக்கு வடக்கூக் கிட்ட
மலேமேலே கோட்டேக் கிட்ட
அடே! கள்ளன் கோட்டை வாசல் கிட்ட
காவல் கார வீரனடா
நன்னுனே நன்னுனே!" அடடா!
நன்னுனே நன்னுனே!'

என்று பாடினதும் காவல்காரன் மனமகிழ்ந்து, வந்தவனே உள்ளே விட்டான்.

ஆங்கோர் ஆலமரத்தடியில் போடப்பட்டிருந்த ஓர் பலகைக்கல் மீது நமது திம்மனும் பொம்மனும் உட்கார்ந்து அன்று நடந்த விருத்தாந்தங்களேப்பற்றி ஸம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஓர் வேலேக்காரன், ஓடிவந்து ஓர் கத்தியின் ஒடிந்த நுனியைத் திம்மன் கையில் கொடுத்து, மகராசா, அண்டை அடிச்சீங்களே அந்தப் பள்ளி—அது வகுத்திலே இது இருந்துச்சு" என்றான்.

அதை இருவர்களும் பார்த்துவிட்டு, "சரிதான் இது அந்தப்பயமகன் கத்திபோலிருக்குது" என்று பக்கத்தில் அலக்ஷியமா யெறிந்து விட்டான். இதற்குள் பகல வேஷககாரன், தன் கின்னரியை மீட்டிக்கொண்டு,

(இந்துஸ்தான் மெட்டு.)

ஆதி மூலமே யற்புதப் பொருளே
அணையாப் பெருஞ் சுடரே
உன்னை நினைந்தேன் என்னை மறந்தேன்
உண்மையை நானறிந்தேன்
தேவர்கள் முனிவர்கள் ஞானிகள் யோகிகள்
தேடும் பரம் பொருளே
திவ்யஸவ ரூபா சின்மாத்ர ரூப
தேடினேன் நின்பதத்தை!
அகிலப்ர பஞ்சத்திற் காதாரமாய் நிற்கும்
அற்புத தத்துவமே
ஆனந்த ரூப ஆத்யந்த ரஹித!
அவ்யக்த தேஜோமய!

என்றுபாடிக் கொண்டே தலைவர் முன்வந்து நின்று கைகூப்பி மரியாதை யாய் வந்தனம் செய்தான்.

திம்மன் புகையிலை யடக்கிக் கொண்டு, பக்கத்தில் துப்பிவிட்டு, வா அப்பா பரதேசி, நீயாரப்பா? எங்கிட்டு வந்தே?

வேஷக்காரன்:—"தேவரவுகளே, நான் பகல் வேஷக்காரன், இது தான் ஜீவனம். இப்படி வேஷங் கட்டிக்கிட்டு, உங்களைப்போல ப்ரபுக்களி டம்போய் வேடிக்கை பண்ணி ஏதாவது சம்மானம்—"

திம்மன்:—"நீ எந்தூரப்பா? என்ன சாதி?"

வேஷக்காரன்:—"நானிருப்பது, மடம். குடிப்பது கஞ்சி"

தலைவர்கள் குலுங்க நகைத்தார்கள். இதற்குள் வேஷக்காரன் கண்கள் பக்கத்திற்கிடந்த கத்தி நுனியில் நாடவே குனிந்து அதை யெடுத்துப்பார்த் தான். அதின் அடிப்பாகத்தில் ஒடிந்த இடத்தில்—'தவன்' என்று எழுதியிருந் தது. வேஷக்காரனின் உடல் ஒருதரம் மின்சார ப்ரயோகமானது போல நடுங்கிற்று. தன்மன ஆவலையடக்கிக்கொண்டு, அக்கத்தியை அலட்சியமாய்த் தன் தலைப்பாகையில் செருகிக்கொண்டான். தலைவர்கள் பார்த்து இவன் ஏதோ கிறுக்கன் என்று எண்ணிச் சிரித்துக்கொண்டு, ஏனப்பா உனக்கு என்னத்துக்கடா? என்று வினவ,

வேஷக்காரன்:—"நெஞ்சிலே இடிச்சுக்கிட" எனவே, தலைவர்கள் குலுங்க நகைத்தார்கள். அக்கத்தியைப் பற்றி அவர்கள் அவ்வளவு பொருட் டாகவும் எண்ணவில்லை.

தலைவர்கள்:—"ஏ பரதேசி! என்னென்னவோ பாடினையே—நம்ம மருதைவீரனைப் பாடு.

வேஷக்காரன் பாடுகிறான்:—

வெள்ளாடு பலிகூடுப்பேன் வேண்டுங்கள்ளுந் தான்கூடுப்பேன்-அடே
கச்சேதனை இறக்கிக்கிட்டி காக்கவாடா மருதே வீர!
அடே சப்பாணிக் கருப்பா னடா, சங்கிலிவீர னடா!
அடே! முண்டாசு கட்டிக் கிட்டு, முறுக்கு மீசிவைச்சுக்கிட்டு,
அடே எந்நேரமும் காக்க வாடா! எங்கா நல்லா குலதெய் வங்கா"

இவ்வாறு பாட்டுப்பாடவே, தலைவர்களிருவரும், மயங்கித் தலைசாய்த்தார்கள். **திம்மன்** கையில் பிடித்திருந்த ஓர் கடிதம் கீழே விழுந்தது. வேஷக்காரன் அவஸரமில்லாமல் அலக்ஷியமாய்க் குனிந்து அதை யெடுத்துத் தன் பைக்குள் அடக்கம் செய்துகொண்டான். இக்கடிதத்தைப்பற்றிய வரலாற்றைப் பின்னால் அநுபந்தம் (appendix) முதலாவது லக்க தஸ்தவேஜாக விவரிப்போம்.

சிறிது நேரத்துக்கெல்லாம் தலைவர்கள் மறுபடி நித்திரை தெளிந்து எழுந்து அடே வீரனே! இந்தப் பரதேசிக்கு நல்ல சோறு கறிபோட்டு, படுக்கவை. நேரமாச்சுது. விடியக்கறுக்கல்லே போகட்டும். ஏன் பரதேசி, சம்மதந்தானே? மறுத்து, இப்போதே போகணுமோ?என"

வேஷக்காரன்:—"முதலாளி உத்தரவுப்படியே" என்றான்.

(இன்னும்வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

அல்லின் பிரபுவின் மகள்.

அல்லின் என்னும் பிரபுவின் மகள், தன் தந்தை மனதுக்கு விரோதமாகத் தான் காதலித்த அல்வா என்னும் தீவிற்கு இறைவனுகிய மலைநாட்டுத்தலைவ னொருவனுடன் ஓடிப்போய் விடுகிருள். தந்தை அவளை ஆள்விடுத்தும், தானேயும் தேடிக் கடைசியாக அவர்களைப் பின்தொடர்கின்ருன். காதலன், காதலி இருவரும் "லாக் கயில்" என்ற ஓர் ஏரியின் கரைக்கு வருகிருர்கள். பெரும் புயல் அடிக்கிறது. அவர்கள் அதனையும் பொருட்படுத்தாது தம்மை அப்புனல் கடத்தி இட்டுச்செல்லுமாறு படகுகாரனை வேண்டுகின்றனர். அபாயத்திற் கஞ்சிப் படகுகாரன் முதலில் மறுத்தும், பெண்ணின் கதியை நினைந்து உடன்படுகிருன். இதற்குள் இவர்களைத் தேடி வருவோர் ஏறிவரும் குதிரைகளின் குளம்பொலி கேட்கிறது. புயலின் கொடுமையினும் தந்தையின் கொடுமைக்கு அதிகமாக அஞ்சிய அப்பெண்ணின் வேண்டுகோட் கிணங்கி யாவரும் படகேறுகின்றனர். படகுகாரனும் தண்டு வலிக்கின்ருன். சிறிது நேரத்திற்கெல்லாம் பெருஞ் சூறைக்காற்று இவர்களைச் சூழ்ந்து கொண்டு விடுகிறது. அப்பொழுது அவள் தன் காதலன் கதியையும் தன் கதியையும் நினைந்து அவனை அணைத்த வண்ணமாகவே அபய மிடுகின்ருள். இது தந்தை காதில் விழுகிறது. "தொடர்ந்த மும்மலம் முருக்கி வெம் பவக் கடல் தொலையக், கடந்து ளோர்களும் கடப்பரோ மக்கள்மேற் காதல்?" உடனே அவன், புத்திரி வாஞ்சைமேலிட்டு அவள்காதலனை மன்னித்து அவனுக்கே அவளைக் கல்யாணம் செய்து கொடுப்பதாய்ச் சத்தியம் செய்து கொடுத்து, அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்ப்பிக்கப் படகொன்றும் அனுப்புகிருன். ஆயினும், அப்படகும் மகள் ஏறிய படகும் அப்புறமும் இப்புறமும் போக முடியாதபடி புயல் வீசியது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருபேரலை கிளம்பிப் படகிலுள்ளோர்களை விழுங்கவே, தந்தை, புத்திரி சோகத்தால் தவித்துத் தத்தளிக்கலானுன். (1) மெய்க் காதலின் துணிவு (2) காதல் கட்டுக் காவலுக்கடங்காதது என்ற உண்மையைத் தந்தையறியாமல் தவறிழைத்ததால் நேர்ந்த துன்பம் (3) தந்தை மனம் நோக நடத்தலால் வரும் தீங்கு (4) புண்ணிய ஜீவகாருண்ணியனை படகுகாரனின் ஆத்ம த்யாகம் (5) "பெற்ற மனம் பித்து" என்ற பழமொழியின் உண்மை முதலிய வற்றை நன்கு விளக்கும் இவ்விஷயத்தைத் தாமஸ் காமெல் (Thomas Campbell) என்ற ஆங்கிலப் புலவர் பின்வருமாறு கூறுகிருர் :—

(1) "எள்ளளவுந் தாமதியேல் ஏ!படகு கார!
இப்புனலைக் கடத்திஎமை இட்டுச்செல்லு வாயேல்
வெள்ளியப வுன்தருவேன் வெகுமதியாய்" என்ன
வேண்டி நின்றான் மலைநாடு மேவிடுமோர் தலைவன்.

(2) "நீயார்கொல் தளிப்பொடு[1] கார் நிறமுமுடைத் தாய
நீர்உள 'லாக் கயில்' கடக்க நினைந்தவன்?" என்றேதா,
"ஏ!யானு? அல்வா என் றிசைதீவின் தலைவன்
இவள் அல்லின் எனும்பி ரபு வின்புதல்வி ஆவள்.

(3) அதிவிரைவில் ஓடுகிறோம் அவளுடைய ஐயன்
ஆட்களின்முன் யாம்ஒருங்கே நாட்களொரு மூன்று
எதிரில்எமை இம்மலைத்தாக்கினில் அவன்காண் பானேல்
என் [2]குருதி கறைப்படுத்தும் புன்புல்நிலம் கண்டாய்

(4) அவன்குதிரை வீரர்எமை அணுகித்தொடர் கின்றார்;
அவர்கள்எம தடிச்சுவட்டை அறிந்துகொள்ளுவாரேல்,
எவர்எனது எழில் [3]வதுவை இன்புறச்செய் வாரோ,
இவளுடைய காதலனை அவர்கள்கொல்லு வாரேல்?"

(5) அன்னதுகேட் [4]டாண்மைமிகும் அம்மலைநாட் டான்"என்
அதிப! செல்வன் நான்;சித்தம் ஆகஇருக் கின்றேன்.
இன்னதுநின் [5]ஏந்தெழிலா ளின் பொருட்டே யன்றி
ஈந்திடுநின் ஒள்ளியதாம் வெள்ளியினுக் கில்லை.

(6) சத்தியம்[6]பூந் தத்தையிவள் தத்தினுக்குள் ளாகித்
தத்தளிக்கச் சற்றும்இனித் தாமதிக்கொ ணாதால்,
எத்துணைதான் இத்திரைநு ரைத்தெழுந்த போதும் [ன்,
இத்துறைநின் றத்துறை சேர்ப் பிப்பென்உமை" என்று

1. கார்—கருமையான. 2. குருதி—இரத்தம். 3. வதுவை—புதுமணப்பெண்.
4. ஆண்மை—சாகாஸம், துணிவு. 5. ஏந்தெழிலாள்—மிகஅழகுள்ளவள்.
6. பூந் தத்தை—அழகிய கிளி (போன்றவள்.)

(7) இன்னதற்குள் விரைந்துபுயல் இரைந்தெழுந்த தோங்கி,
[7]இசைத்ததுகீச் செனவேகநீ ரினில்வாழும் பேயும்;
அன்னவர்சம் பாஷணைசெய் தாங்கிருக்கும் போதே
அகல்விசும்பு [8]கறுத்துறும அவர்முகமும் கறுத்த.

(8) இதுகிடக்க; முன்னையினும் இரைந்துபுயல் வீசி
எழுந்தடித்தும் பயங்கரமா இருள்கவிந்தும் கூட
குதிரை[9]இவர்ந் தாயுதம்கைக் கொண்டோர்மலைத் தாக்குக்
குறுகினர்[10]மாக் குளம்பொலியும்குறுகி[11] மிகக்[12]கேட்ட

(9) "விடுவிரைவில்! விடுவிரைவில்! வீசுபுயற் காற்று
மேவிநமைச் சூழினுமே விசும்புறுத்தும் பொல்லாக்
கடுமையும்யான் துணிந்தெதிர்ப்பேன் காண்; எனது தந்தை
கடுஞ்சினம்பொ றேன்" எனஅக் காரிகைக ரைந்தாள்.

(10) புயல்அடிக்கும் கரையினின்றும் போந்துபட காங்கே
பொங்கு திரைக் கடல்கடக்கப் புறப்படவும்என்னே!
இயல்மனிதர் எதிர்க்கவொணு [13]இகலுடனே [14]சூறை
இப்படகைச் சுற்றிவளைந் திட்டதுவே அந்தோ!

(11) சலியாதன் னவர்படகைத் தாக்கிஎதிர்த் தார்த்துத்
தள்ளும்அலை யையும்எதிர்த்துத் தண்டுவலிக் குங்கால்
அலின்பிரபு [15]படுகரையை அடைந்தனன்; அப் போதே
அவன்கோபம் மாறியதே அழுகை யதாய் அந்தோ!.

(12) இருளிலும்காற் றிலும்வருந்தி இருந்துகலங் குந்தன்
எழில்மகளைக் கண்ணுற்றான் ஏங்கிமனம் புண்ணாய்;
ஒருஇனிய கரமதனை உதவி பெற நீட்டி
உயிர் அனைய காதலனை ஒருகரத்தால் அணைத்தாள்.

---

7. இசைத்தது—சப்தித்தது. 8. கறுத்து உறும—கரு நிறம் கொண்டு அல்லது கோபித்துக் குமுற. 9. இவர்ந்து-ஏறி. 10. மா-குதிரை. 11. குறுகி—சமீபித்து. 12, கேட்ட—கேட்டன. 13. இகல்—வலிமை. 14. சூறை—சுழல்காற்று. 15. படு—மரணத்துக்கு ஹேதுவாகிய.

(13) விசனமொடு கதறினன்:"இவ் வீசுபுயல் மேவும்
விரிதிரையின் மீளுகநீ; மீளுக.நின் உள்ளம்
16 இசையுமலை நாட்டிறைவன் இயற்று பிழைபொறுத்தேன்:
என்மகளே! ஐயையோ! என்மகளே!" என்ன.

(14) இலை இதனுற் பயன்; இவர்கள் வரவும் துணை பெறவும்
இல்லாமற் றடுத்திரைநீர் ஏற்றியதாற் கரையை;
அலையெழுந்து ஆர்க்கமுடன் அவன்மகளை விழுங்க
அழுதரற்றிச் சோகமுடன் அவன் இருந்தான் ஆங்கே.

டி. கோ.

போர் வீரன் கனவு.

—:O:—

பிறவிக்குருடன், செவிடன், ஊமை, மலடி, முடவன், நித்தியதரித்திரன்- இவர்கள் முறையே பார்வை, சங்கீத உணர்ச்சி, பேச்சு, மகப்பேறு, கொம்புத்தேன், புதையல் இவை பெற்றது போல் கனவிற் கண்டு களித்து, விழித்தெழுந்ததும் ஏமாற்ற முற்று வருந்தியது போல, மனைவிமக்களுடன் கணப்பொழுதேனும் இருந்து சல்லாபம் செய்வதற்கும் சாவகாச மற்ற போர் வீரன் ஒருவன், தான் படுகளத்தினின்றும் நீங்கிச் சுதேசம் புக்குத் தனது புலம், மனை, உற்றார்,உறவினரைக் கண்டு களித்துத் தான் அவர்களுடன் உண்டதாகவும், தன் பிரிவாற்றாது வருந்தும் மனைவி மக்கள் மனங் குளிரத், தான் இனிப் படுகளத்தை எட்டிப்பார்ப்பதில்லையென்று சத்தியம் செய்துகொடுத்ததாகவும், கனவிற் கண்டு, விடிந்ததும் அவ்வளவும் பொய்த்துப்போயினமையின் வருந்துகின்றான். இப்பரிதாப சம்பவத்தை "காமல்" என்னும் நம்கவிராயர் அடியில் வருமாறு கூறுகிறார். ஸ்ரீ கிருஷ்ணனிடம் மாயையின் உண்மையைப்பற்றி அறியவிரும்பிய நாரத மகா ரிஷியின் கதையை இது நினைப்பூட்டுவதாகும்:

I

காரிருள் [1] கவிய, விண்ணிற் காவல்செய் வீரர் போன்று
[2] தாரகைக் கணங்கள் நிற்பச், [3] சமர்நிறுத் திடஎம் காளம்

16. இசையும்—விரும்புகிற.

1. கவிய=மூடிக்கொள்ள, 2. தாரகைக் கணங்கள்=நட்சத்திரக் கூட்டங்கள்; 3. சமர்=யுத்தம.